# தேவதிட்டத்தை தீர்க்கமாக வரை




"நீ தரிசனத்தை எழுதி அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படி பலகைகளிலே (Tables —வரைபடக் கட்டங்களில்) தீர்க்கமாக வரை" (ஆபகூக். 2:2).

1. ஆபகூக் இஸ்ரவேல் ஜனத்தின் ஒரு போதகன் என்ற முறையில், தீர்க்கதரிசனத்தை மற்றவர்கள் வாசிக்கவும், கற்றுக் கொள்ளவும், அதன்படி நடக்கவும் தக்கதாக வரைபடமாய் எழுத, யாவே தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார். இந்த வேதபகுதி நமக்கு கற்பிக்கிறதாகவும், அறிவுரை மூலம் ஆர்வமாய் தூண்டுகிறதாகவும் இருக்கிறது.

2. நாம் இப்போது சித்திர வர்ணங்களும், இயங்கும் சித்திரங்களுங் கொண்ட காட்சியிலான வர்ண வண்ணங்கள் நிறைந்த உலகத்தில் வசித்து வருகிறோம். அவைகள் அப்படித்தான் என்று எடுத்துக்கொள்ள விழைகிறோம். இன்றைய உலகம் தகவல் தொழில் நுட்ப ( Information Technology ) முன்னேற்ற புரட்சியில் முழுமையாகவே மறுருபமாகி இருக்கிறது. அதிர்ச்சியுண்டாக்கு மளவுக்கு திரளான செய்திகள் குறிப்புகள், எலக்ட்ரானிக் வடிவமாக வைக்கப்பட்டும், அச்சுப்பதிப்பாகவும் நமக்குக் கிடைக்கின்றன. கம்ப்யூட்டர்களினால் குறிப்பாக உலகம் பரந்த வெப் (web), இன்டர்நெட் முதலியவைகளால் திகைப்படையுமளவுக்கு சாதாரண மனிதனுங்கூட கற்றுக் கொள்ளுமளவுக்கு வாய்ப்புகள் மிகுந்து இருக்கின்றன.

3.1. அப்போஸ்தலனாகிய பவுலின் காலத்திய உலகம் தொழில்நுட்ப அறிவில் குறைந்த நிலையிலேயே இருந்தது. ஆகவே அப்படிப்பட்டக் காலத்தில் அடிப்படையான சுவிசேஷத்தை கற்பிப்பதற்கு போதகனாக ஒருவன் அனுப்பப்பட்டாலொழிய ஒருவனும் கற்றுக் கொள்ள முடியாது என்று அவர் வலியுறுத்துகிறார். இவ்வாறாகவே போதகனான ஆபகூக்கும் மற்றவர்கள் புரிந்துகொள்ளும்படி செய்தியை எடுத்துக்கூற கடமைப்பட்டவனாயிருந்தான்.

3.2. யேசு தமது சீஷர்களிடம் நிறுவின ஊழியம், அதாவது இரண்டு இரண்டு பேராய் செய்யும் ஊழியம், சுவிசேஷ ரட்சிப்பின் செய்தியை பரப்புவதற்கு குறிப்பிடத்தக்களவுக்கு மிகவும் பயனுள்ள விளைவுள்ளதாயிருந்தது. உவமை எனும் சொற்களால் வரையப்பட்ட சித்திரப்படக் கதைகளின் மூலம் நமது கர்த்தராகிய யேசு, தெய்வீக மனதின் (The Divine Mind) தத்துவங்களையும், கொள்கை கருத்துக்களையும், தம்மை கேட்டுக் கொண்டிருந்தவர்களின் மனங்களில் பதித்து நிலைத்திருக்கும்படிச் செய்தார். இந்தக் கதைகளும் சொல் சித்திரங்களும் தகவலாக அல்லது செய்தியாக அல்லாது, செயல்படுத்துவதற்கு உந்தி ஊக்குவிக்கிறதாயிருந்தன.

4. அவ்விதமாகவே அவைகள் இன்றைய நாளிலுங்கூட இருக்கின்றன. செத்துப்போன, செத்துக் கொண்டிருக்கிற உலகத்தை ஆசீர்வதிப்பதற்கு வேண்டிய தகவல்களைத் தெரிவிப்பதற்கான எல்லா உபகரணங்களையும் முடிந்தளவு பயன்படுத்தி, தேவவார்த்தையை (சத்திய சுவிசேஷத்தை) நாம் ஒவ்வொருவருக்கும் போதிக்க வேண்டும். கூடுதலாக கிறிஸ்தவ குணாம்சத்தையும் நடத்தையையும் எல்லோரும் காணும்படி அதாவது ஊக்கம் தேவைப்பட்டவர்களுக்கு நாம் உதவி செய்யத்தக்கதாக சொந்த ஜீவியத்தில் நாம் வரைந்து வைக்க வேண்டும்.

## இந்தச் செய்தியின் நோக்கம்

5. இந்தச் செய்தி, "யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டத்தை" (the Divine Plan of the Ages) அறிமுகம் செய்கிறது. மேலும் இது தெய்வீகத் திட்டத்தின் அடிப்படைக் கருத்துக்களை விரிவுபடுத்தி, சரித்திரம் முழுவதிலும் எவ்விதம் தேவன் கிரியை செய்து வருகிறார் என்பதைக் காண்பிக்கிறது. தேவன் இப்பவும் இன்றைய குழப்பமான சூழலிலும் இன்னமும் கிரியை செய்து வருகிறார் என்பதையும் காண்பிக்கிறது. மேலே கொடுக்கப்பட்டிருக்கும் இந்த வரைபடத்தின் மூலம் யுகங்களின் திட்டம் அருமையாக விளக்கப்பட்டிருக்கிறது.

6. இந்த வரைபடம் ஒரு சித்திர உபகரணமாக நீண்டகால சரித்திரத்தைக் கொண்டதாயிருக்கிறது.. இந்த வரைபடத்தின் மேல் பகுதியில் காணப்படும் வில்போன்ற வளைவு கோட்டுப் பகுதிகளில் இந்தச் செய்தியின் பொருள் குவிந்திருக்கிறது.

7. சிலர் தங்கள் அறியாமையினால் ஒரு பெரிய கட்டிட நிபுணரின் திறமையையும், ஞானத்தையும் அவரது முற்றுப் பெறாத வேலையைக் கொண்டு தவறாகக் கணிக்கிறதுபோல, அநேகர், அவர்களது அறியாமையில் தேவனுடைய முற்றுப் பெறாத வேலையைக் கொண்டு தேவனை தவறாகக் கணிக்கிறார்கள். நமது ஒழுங்கு பயிற்சிக்காகவும், முடிவில் பின்பு நமது நன்மைக்காக சரியாக ஆண்டு கொள்ளப்படுவதற்காகவும், தீமையினால் அமைக்கப் பட்டிருக்கும் சாரக்கட்டு (Scaffolding) மெள்ள மெள்ள நீக்கப்பட்டு அவ்விதம் உபயோகமற்ற வேலை வெளிப்படும். நிலைத்திருக்கும் கட்டமைப்பு தேவனுடைய முடிவில்லாத ஞானத்தையும், வல்லமையையும் அறிவிக்கும். அவரது திட்டம் அவரது மகிமையான குணாம்சத்தோடு இணக்கமாக இருக்கும்.

8. திட்டமாக நிர்ணயிக்கப்பட்ட நோக்கம் தேவனுக்கு இருக்கிறது என்றும், அவரது நோக்கங்களெல்லாம் நிச்சயமாக தீர்மானிக்கப் பட்டிருக்கிறதின்படி, நிறைவேற்றி முடிப்பார் என்றும் அவர்தாமே

சொல்லுகிறார். ஆகவே அவைகளில் ஆர்வமுள்ளவர்கள் வேத வாக்கியங்களைத் தேடிப் பார்ப்பது அவர்களுக்குப் பொருத்த மாயிருக்கிறது. மனிதனோடு தேவனுடைய இடைபடும் காரியங்கள், அங்கும் இங்குமாகவும் மர்ம ரகசியமாகக் காணப்பட்டாலுங்கூட (ஏசா.28:13) தேவனுடைய வார்த்தையின் சாட்சிகளை புரிந்து கொள்ளுகிறவர்களும் விசுவாசிக்கிறவர்களும், அவருடைய அநாதியான திட்டம் எவ்விதத்திலும் மாற்றப்படாது, முறைப்படி முழுமையாய் முற்றுப்பெற்று முடிவடைவதற்காக முன்னேகிக் கொண்டு இருக்கிறதை மனமார ஒத்துக்கொள்ளுவார்கள்.

## மூன்று உலகங்கள்

9.1 தேவனுடைய வாக்குத்தத்தத்தில் விசுவாசம் இல்லாத மனுக்குலத்திரள், தேவனின் தெய்வக்கலை நிபுணத்துவத்தின் மகிமையான குணாம்சத்தை உணருவதற்கு அவருடைய திட்டத்தின் உண்மையான முன்னேற்றங்களுக்காகக் காத்திருக்க வேண்டும். ஆனால் தேவனுடைய வார்த்தையாகிய அவரது விளக்கின் வெளிச்சத்தாலும், விசுவாசத்தாலும், முன் சொல்லப்பட்டதும், வரவிருக்கிறதுமான மகிமைகளைக் காண்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு மட்டுமான சிலாக்கியமும் பாக்கியமும். தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையிலும், நாம் அவரது திட்டத்திலிருந்தும், அதில் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பு களிலிருந்தும் அவரது நோக்கங்களை புரிந்து கொள்ள வேண்டி, வேதாகமத்தில் தேடுகிறோம்.

9.2. அதில் நாம் மனிதனுக்கு சம்பந்தப்பட்ட தேவதிட்டம், மூன்று காலக்கட்டங்களில் வியாபித்திருக்கிறது என்று காண்கிறோம். அது, மனிதனின் சிருஷ்டிப்பிலிருந்து எல்லை வரையில்லாது வரவிருப்பதை கொண்டதாயிருக்கிறது. பேதுருவும், பவுலும், இந்தக் கால கட்டங்களை, "மூன்ற உலகங்கள்" (படத்தைப் பார்க்கவும்) என்று அழைக்கிறார்கள். இந்த மூன்று உலகங்கள் ஒவ்வொன்றும் அதனதன் தெய்வீக பரிபாலன வெளிப்பாட்டை தொனிப்பாக பிரதிபலிக்கிறது. அவைகளாவன 1) அப்பொழுது இருந்த உலகம் (the World That Was) (2) இப்பொழுது இருக்கும் தீமையான உலகம் (the Present Evil World) 3) வரவிருக்கும் உலகம் (the World To Come).

10. இந்தக் காலக் கட்டங்களின் *முதல் நேமகம்* அல்லது உலகம் (சாத்தானுக்குள் இருந்தாலும்) தேவதூதர்களின் பணிவிடைக்குள் இருந்தது. இரண்டாவது உலகம், அபகரித்துக் கொண்ட சாத்தானுடைய ஆட்சியின்கீழ் இருந்து கொண்டு வருகிறது. மூன்றாவது உலகம் (யேசுவின் ஆட்சியின் கீழ்) பூமி யிலுள்ள எல்லா வம்சத்தாருக்கும் நீதியும் ஆசீர்வாதமுமான காலகட்டமாகும். வேதாகமத்தில் 2வது, 3வது நேமங்களைக் குறித்து, குறிப்பாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு சம்பந்தமான வாக்கியங்கள், ஒன்றுக்கொன்று எதிரிடையாக கடும் வித்தியாசமாக இருக்கின்றன.

11. *இரண்டாவது நேமகம்* (உலகம்), இப்பொழுது இருக்கிற தீமையான உலகம் என்று அழைக்கப்படுகிறது. அது, அதில் நன்மையானது ஒன்றுமில்லை என்றதொரு காரணத்தால் அல்லாது, ஆனால் தீமை அதில் மேலோங்கியிருக்கும் காரியத்தினால் அவ்விதம் அழைக்கப்படுகிறது. "இப்பொழுதும் அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம். தீமை செய்கிறவர்கள் திடப் படுகிறார்கள். அவர்கள் தேவனை பரீட்சை பார்த்தாலும் விடுவிக்கப் படுகிறார்களே" (மல். 3:15).

12.1. *மூன்றாவது நேமகம்* (உலகம்), "வரவிருக்கிற உலகம்" என்றும் அதில் நீதிவாசமாயிருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் தீமையொன்றும் இருப்பதில்லை என்ற காரணத்தினால் அல்லாது, தீமை மேலோங்கி இருப்பதில்லை என்பதால் அது அவ்விதம் அழைக்கப்படுகிறது. தீமையை பிடுங்கி நீக்கிப் போடுதல் படிப்படியாக நிகழும். அது கிறிஸ்துவின் ஆட்சியில் அவரது ராஜ்யம் பூமியில் இருக்கும்போது நிகழும். அப்பொழுது தீமை ஆண்டு கொண்டிருப்பதில்லை ; விருத்தியடைவதுமில்லை. ஆனால் அதில் நீதிமான்கள் செழித்து விருத்தியடைவார்கள் (சங். 72:7). கீழ்ப்படிகிறவர்கள் தேசத்தின் நன்மையைப் புசிப்பார்கள் (ஏசா. 1;19). சுருக்கமாக, வரவிருக்கிற உலகம் நாம் இப்பொழுது இருக்கிறதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். எப்படியெனில், "இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகிய சாத்தானுக்கு" வரவிருக்கிற உலகத்தில் எந்தவித பங்குமில்லை.

13. யேசு, 'எனது ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியது அல்ல" என்று கூறினார். அதாவது வரவிருக்கிற உலகம் வரும்வரை, கிறிஸ்துவின் ராஜ்யம் பூமியை கட்டுப்படுத்தாது. ஆகவே நாம் "உம்முடைய ராஜ்யம் வருவதாக" "உம்முடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக" (மத். 6:10) என்று ஜெபிக்கிறோம். மனிதனின் ரட்சிப்புக்கான மகா உன்னத திட்டக் கலைஞரின் திட்டத்தில் சில முக்கியமான பாகங்கள் இன்னும் பூரணமாக விருத்தி செய்யப்படவில்லை. (அவ்விதம் அவைகள் விருத்தி செய்யப்படக் காத்திருக்கின்றன). அப்படியில்லாவிடில், கிறிஸ்துவாகிய புதிய நேமகம், அதிக முன்னதாகவே அமுலாக்கப்பட்டிருக்கும்.

14.1 ஏன் கிறிஸ்துவின் ராஜ்யம் வராதிருக்கிறது? வெளிப்படுத்தின புத்தகத்தில் (11:15) ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தம் வானத்தில் உண்டாயிற்று. இதன்பொருள், உலக ராஜ்யங் களிலிருந்து மகிமையான கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கு மாற்றப்படுதல் பொதுவான மகா உபத்திரவத்தின் காலத்தில் (தானி. 12:1) நடக்கும் என்பதாக காட்டுகிறது.

14.2 இதனை கவனத்துக்கு கொண்டுவந்த யேசு, 'பலவானை முந்தி கட்டினாவொழிய ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து அவன் உடமைகளைக் கொள்ளையிடக்கூடாது. கட்டினா னேயாகில் அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்" (மாற். 3;22—27) என்று கூறுகிறார். 'பலவான்' என்பது இங்கு சாத்தானைக்குறிக்கிறது. சாத்தானைக் கட்டுவது கிறிஸ்துவின் ராஜ்யம் நிறுவப்படுவதற்கு முன் செய்ய வேண்டிய முதல் வேலையாகும்.

## அப்பொழுது இருந்த வானங்களும் பூமியும்

15. பேதுரு அப்போஸ்தலன், இந்த மூன்று காலக்கட்டங்களையும், தனித்தனியான வானங்களும், பூமியுமாக வேறுபடுத்தி, பெயரிடுகிறார் (2 பேது 3:5—13). இங்கு வானங்கள் என்பது ஆண்டு கட்டுப்படுத்தும் உன்னத ஆவிக்குரிய வல்லமைகளைக் குறிக்கின்றன. பூமி என்பது, மனுக்குல அரசாங்கங்களையும், சமூக அமைப்புகளையும் குறிக்கின்றது. "அப்பொழுது இருந்த" முதல் வானங்களும் பூமியும் ஜலப்பிரளயத்தில் முடிவடைந்தது. ஜலப்பிரளயத்தால், சொல்லர்த்த (literal earth) பௌதீக பூமி மாற்றமடைந்தாலுங்கூட, அது அழியாது இருந்தது. (பிரசங்கி. 1:4).

## இப்போதைய தீயஉலகத்தின் வானங்களும் பூமியும்

16. இப்போதைய அடையாளமான வானங்களும் பூமியும் அடையாளமான மகா சத்தத்தோடும் அக்கினியோடும் கடந்து போகும். பலவானான சாத்தான் கட்டப்படும்போது, அவன் தனது வல்லமையை பற்றிக் கட்டிப்பிடித்துக் கொள்ள (போராடி ஆட்டங்கண்டு) திண்டாடுகிறான்.

## வரவிருக்கிற வானங்களும் பூமியும்

17. இந்த இப்போதைய உலகத்தைத் தொடர்ந்து வருகிற உலகம், புதிய வானங்களான கிறிஸ்துவின் கீழ், தெய்வீக தத்துவங்களோடு

இணக்கமாக சீராக அமைக்கப்பட்ட சமுதாயமாகிய பூமியாகும். புதிய ஆளுகைக்கு நீதியே அடிப்படையாக இருக்கும். நேர்மையும் சமாதானமும் அந்த நாளின் பொது ஒழுங்காக இருக்கும். அப்போஸ்தலன் பவுலுக்கு வரவிருக்கிற உலகத்தின் ஒரு காட்சி கொடுக்கப்பட்டது. அவர் 'எடுத்துக் கொள்ளப்பட்டு' (caught up) கால ஓட்டத்தின் நெடுகில் பார்த்து, கிறிஸ்துவுடைய ஆவிக்குரிய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறவிதமாக மூன்றாம் வானங்களின் காரியங்களைப் பார்த்தார் (2 கொரி. 12:2—4). அப்படிப்பட்டதொரு காரியங்களின் காட்சி அப்போஸ்தலன் யோவானுக்கு பத்மு தீவில் கொடுக்கப்பட்டது (வெளி. 1:9).

## நேமகங்களின் உட்பிரிவுகள்

18.1 முதல் உலகத்தில் முழுவதிலும், தேவன் மனிதனோடு இடைபடுகிற தேவனுடைய முறை அதிக வித்தியாசப்படவில்லை என்பது தெரிகிறது. வேதவாக்கியங்கள் அப்படிப்பட்ட விவரங்களை அதிகமாகத் தரவில்லை. ஏதேனில் ஆதாமின் வீழ்ச்சி, பின்பு மிகவும் மோசமான விளைவைக் கொடுக்கும்படி, மனுக்குல நிலையை தவறாக செயல்படுத்திய தேவதூதர்களின் பிரசன்னம் (ஆதி. 6:1,2) ஆகியவையே வேதவசனங்கள் முக்கியமாக, பேசின காரியங்களாய் இருக்கின்றன. இந்த உலகம் ஜலப்பிரளயத்தோடு முடிந்தது.

18.2 நாம் இருக்கிற இந்த இரண்டாவது உலகம் (தேவன் மனிதனோடு இடைப்பட்ட முறையின் அடிப்படையில்) மூன்று யுகங்களாக பிரிக்கப்படலாம்.

- ஆதிபிதாக்களின் யுகம் ( the Patriarchial Age)
- யூதயுகம் (the Jewish Age)
- சுவிசேஷயுகம் ( the Gospel Age)

இந்த ஒவ்வொரு யுகமும், தீமையை கவிழ்த்துப்போடுகிற தேவ திட்டத்தில் (the Plan of God) ஒருபடி முன்னேறுதலாகும். ஒவ்வொரு படியும் முந்திய படியின் மேல் கட்டப்பட்டு முழுமைப்படுவதற்கு கிட்டிச் சேர்க்கிற திட்டமாகும்.

18.3 மூன்றாம் உலகம் ஆயிரவருடங்களைக் கொண்ட மேசியாவின் யுகம், அல்லது இழந்துபோனதை திரும்பப் பெறும் யுகம் (Times of Restitution - ரெஸ்ட்டிட்டூஷன் — அப். 3:19—21 — ஆங்கில வேதாமகம் காண்க. தமிழாக்கம் சரியில்லை). இந்த யுகம் வரவிருக்கிற யுகங்களால் தொடரப்படும். அவைகளைக் குறித்து எந்தவிதக் குறிப்புகளும் வெளியாக்கப்படவில்லை (எப.2:7). இப்போதைய வெளிப்பாடுகள், மனிதன் பாவத்திலிருந்து குணமாகி எழுந்து வருதலைக் குறித்தது. வரவிருக்கிற மகிமையின் நித்தியத்தைக் குறித்தது அல்ல.

## ஆதிபிதாக்களின் யுகம்

19. இப்பொழுதுதிருக்கிற உலகத்திலே முதல் யுகத்தை ஆதிபிதாக்களின் யுகம் என்று அழைக்கிறோம். ஏனெனில், அந்த யுகக் காலத்தில் சில தனிப்பட்ட மனிதர்களோடு மட்டும் தேவனுடைய இடைபாடுகளும் (dealings) தயவுகளும் (favours) இருந்தன. மற்ற மனுக்குலமனைத்தும் கிட்டத்தட்ட ஒதுக்கப் பட்டிருந்தன. அவ்விதம் தயவு பெற்றவர்களில் தேவனுடைய சிநேகிதர்களாகக் கருதப்பட்டவர்கள் ஆதிபிதாக்களான நோவா ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களாவர். யாக்கோபின் மரணத்தோடு அந்த யுகம் அல்லது தேவன் இடைப்படுகிற அந்த முறை முடிவுக்கு வந்தது.

## யூத யுகம்

20.1 யாக்கோபின் மரணத்தில், அவனது வம்சாவழி வந்தோரை இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்கள் என்று வேதாகமம் அழைக்கிறது. மேலும், அவர்கள் அனைவரையும் யாவே தேவனால் அவரது சொந்த ஜனமாக (தமது வினோதமான ஜனமாக — His Peculiar People - உபா.14:2 ; 26:18 ) கருதப்பட்டனர். அவர்களுடைய அடையாளமான பலிகளின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக புற ஜாதியார்களிடமிருந்து அவர்களைப் பிரித்து தனிப்படுத்தப்பட்ட ஒரு பரிசுத்த ஜாதியாக அவர்கள் நடத்தப்பட்டனர். ஆகவே அவர்கள் விசேஷமான தயவை தேவனிடத்தில் அனுபவித்தனர். இந்த தேவ திட்டத்தின் அம்சங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் யாக்கோபின் மரணத்தில் ஆரம்பித்து கிறிஸ்துவின் மரணத்தில் முடிவடைந்தது. இந்தக் காலப் பகுதியை யூத யுகம் அல்லது நியாயப்பிரமாண யுகம் என்று அழைக்கிறோம்.

20.2 அந்த காலக்கட்டத்தில் தேவன் அவர்களை விசேஷமாக ஆசீர்வதித்தார். அவர்களுக்கு அவரது பிரமாணத்தை கொடுத்தார். அவர்களோடு உடன்படிக்கை பண்ணினார். அவர்களுக்குத் தீர்க்கதரிசிகளை அனுப்பினார். முடிவாக அவர்களிடம் தமது குமாரன் லோகாஸை (Logos) அனுப்பினார். யேசு (லோகாஸ்) அற்புதங்களை அவர்கள் மத்தியில் நடத்தி அவர்களுக்கு போதித்தார். அவர் சுற்றியுள்ள தேசத்துக்கு (புறஜாதி தேசங்களுக்கு) போகாமலும், தமது சீஷர்களையும் அனுமதிக்காமலும் இருந்தார் (மத். 10:5.6). "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியா பட்டணங்களில் பிரவேசியாம்லும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு போங்கள்" (மத். 10:5,6).

20.3 யூததேசத்திற்கான தயவு, கிறிஸ்துவை புறக்கணித்து அவரை சிலுவையில் அறைந்தபோது முடிந்தது. அது யேசுவின் வார்த்தையில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் "உங்கள் வீடு, உங்களுக்கு பாழாக்கி விடப்படும்" (மத். 23:38 your house is left unto you desolate — உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்பட்டிருக்கிறது — ராஜாவாக பவனியில் வந்த அவரை அவர்கள் புறக்கணித்தபோது அந்த க்ஷணமே அது நிறைவேறலாயிற்று).

## சுவிசேஷ யுகம்

21. இந்தக் கால கட்டம் கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிப்பைக் குறித்தும், அவருடைய ராஜ்யத்தைக் குறித்தும், பரம அழைப்புக் குரிய அழைப்பைக் குறித்தும், செய்தியை பிரசங்கித்தலில் ஆரம்பித்தது. சுவிசேஷம் இப்போது எல்லா தேசத்திற்கும் சென்றடைந்திருக்கும் அளவுக்கு மிகவும் தீவிரமாக சென்றது. ஆனால் அது நிச்சயமாக தேசங்களை மனமாறச் செய்யவில்லை. அவ்விதம் மனமாறச் செய்யவேண்டும் என்பது தேவனுடைய தீர்மானமும் இல்லை. ஆனால் அதே சமயம் அது அங்கேயும் இங்கேயுமாக மிகவும் சொற்பமான பேரைக் கவர்ந்தது. யேசு கூறியதின்படி அது ஒரு சிறு மந்தையை (லூக். 12:32) மொத்தத்தில் கவர்ந்தது. அப்படிப்பட்டோருக்கு கிறிஸ்துவோடு உடன் சுதந்திரத்தை கொடுப்பதுவும் அவரது சிங்காசனத்தில் இடம் கொடுப்பதுவும் (ரோம.8:17) அவரது பிதாவுக்கு உகந்ததாயிருந்தது.

22. சுவிசேஷயுகம் முடிவில் இந்த இப்போதைய தீமையான உலகம் — இரண்டாவது நேமகம் — முடிவுக்கு வருகிறது. தேவன், தீமை ஓங்குதலையும், ஆளுதலையும், அவரது காரணங்களை தடுக்கிறதாகக் காணப்பட அனுமதித்திருந்தாலுங்கூட, அவரது ஆராய முடியாத ஆழ்ந்த தீர்மானத் திட்டங்கள், எந்தவொரு தட்டுத்தடையு மின்றி நிலையாக முன்னேறிக்கொண்டு இருக்கின்றன.

## ஆயிரவருட யுகம்

23. இந்த ஆயிர வருட யுகம், வெளி. 20:4 இல் கொடுக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் ஆட்சியைக் குறிக்கிறது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். இந்த யுக காலத்தில்தான், மனுக்குலம் ஏதேனில் இழந்து போன புராணத்துவத்துக்கு மறுபடியும் எடுத்து நிறுத்தப்படுதல் நிகழும் (Restitution - அப்.3:19—21— ஆங்கில வேதாகமம் காண்க — தமிழ் மொழியாக்கம் சரியில்லை). ஆயிரவருட யுக எல்லைக்கும் அப்பால், வருகிற ஆசீர்வாத பாக்கியம் நிறைந்த யுகங்களில் இனி மரணம் இருப்பதில்லை. கவலையிருப்பதில்லை, கண்ணீர் இருப்பதில்லை, வேதனை இருப்பதில்லை. முந்தியவைகள்

அனைத்தும் ஒழிந்துபோயின (வெளி. 21:4). இதற்கு அப்பால் வேதாகமத்தில் இருக்கும் தேவவெளிப்பாடு மேலும் எதனையும் குறிப்பாகத் தெளிவாக்கவில்லை.

24. இதுவரையில் நாம் பார்த்த மேலே கொடுக்கப்பட்டவைகள் தேவதிட்டத்தின் மேலோட்டமான வரைபடமாகும். ஒவ்வொரு யுகமும் தேவனுடைய திட்டத்தின் தேவையான வளர்ச்சிக்கு முன்னேகி விருத்தியடைதலை நிறைவேற்றுகிறது. அது மொத்தத்தில் மிகவும் நேர்த்தியாக விருத்தியடைந்து கொண்டும், திறக்கப்பட்டுக் கொண்டும் இருக்கிறது.

25. ஒரு யுகத்திற்குரிய அல்லது சகாப்தத்திற்குரிய வேதவசனம் மற்றதொரு யுகத்திற்கு பொருந்த செய்யக்கூடாது. ஏனெனில் ஒரு யுகத்துக்கான வசனம் எப்பொழுதும் மற்றொரு யுகத்துக்கு பொருந்துகிறதாய் அல்லது உண்மைப்பொருளாக இருக்காது. (2 தீமோ 2:15). உதாரணமாக: இப்போதைய காலம் (சுவிசேஷயுகம்) கர்த்தரைப் பற்றும் அறிவினால் பூமிநிறைந்திருக்கும் என்றும் அவரது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறது போல பூமியிலும் செய்யப்படுகிற காலம் என்றும் சொல்லுவது புத்தியீனமாகும். ஆயிர வருட யுகத்தில் மேசியாவின் ஆளுகையின் விளைவாகவே சமுத்திரமானது ஜலத்தினால் நிறைந்து இருக்கிறது போல நீதியானது பூமியை நிரப்பும்.

26. கர்த்திருடைய சீஷர்கள் என்ற முறையில் சமயம் வாய்த்தாலும் சமயம் வாய்க்காவிட்டாலும் (2 திமோ 4:2) ஜீவனுள்ள வார்த்தைக்கு ஊழியம் செய்ய சிலாக்கியம் பெற்று இருக்கிறோம். ஆபகூக் எழுதியிருக்கிற தரிசனம், யுகங்கள் வழியாய் தேவஜனத்துக்கு கிடைத்திருக்கிறது. அவர் செய்ததுபோல அது பிறருக்கு சென்றடையச் செய்ய நம்மையும் ஊக்குவிக்கவேண்டும். அவ்விதம் செய்வதால் மற்றவர்களுக்கு கற்பிப்பது மட்டுமல்லாது அவர்கள் ஒரு ஜீவிக்கிற விசுவாசத்தை காட்டுவதற்கு உதவுகிறோம். அது அவர்களது பரிசுத்தமாக்கப்பட்ட காரண யுக்தியின் அடிப்படையில் கட்டப்படுகிறது. அது விசுவாசமில்லாத இந்நாட்களில் நிற்க அவர்களுக்கு உதவுகிறது.

MAKE IT PLAIN UPON TABLES - BS 790



## தேவ ஏற்பாடு ஐக்கிய முகாம்

***"பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்"***
***மத். 24:28 ; யோபு 39:30***

யாவே தேவனுக்கு சித்தமானால், சத்திய சகோதரர்களின் 20வது ஐக்கிய முகாம் ஜூலை மாதம் 13, 14ஆம் தேதிகளில் பாவாய அம்மாள் திருமண மண்டபம், சுதர்சன் சூப்பர் மார்க்கெட் மேல், அம்மா பாளையம் மெயின் ரோடு, தர்மாநகர், சேலம், 636 005 இல் நடைபெறும். தங்குவதற்கு வசதி உண்டு. தங்கள் சொந்த செலவில் லாட்ஜிங் வசதி தேவைப்படுமாயின் அதன் விவரங்களை தெரியப்படுத்துங்கள். இதில் கலந்து கொள்ளுகிறவர்கள் தாங்கள் எத்தனை பேர் என்பதையும் வந்து சேரும் நேரத்தையும் சகோ.ஜோசப் பூபால் அவர்களுக்கு, கதவு எண்.9, 5வது க்ராஸ், தர்மா நகர், சேலம்—636 005 என்ற முகவரிக்கு தெரியப்படுத்துங்கள். போன் : 0427—446630.

# பரம மன்னா

"உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினால் கடினப்பட்டு போகாதபடிக்கு, இன்று என்னைப்படுமளவும் நாடோறும் ஒருவருக்குகொருவர் புத்தி சொல்லுங்கள்"

எபிரேயர். 3:13

Ⓙ பாவம் அதன் வெவ்வேறு அணுகுமுறையில் மிஞ்சியளவு வஞ்சகமானதாயிருக்கிறது.

Ⓙ அதன் பரிவான அணுகுமுறைகள் வெளிப்படையாக, சரியாகத் தோன்றினாலும், அவைகள் அவைகளுக்கு இணங்குகிறவர்களின் இருதயங்களில் உணர்சியற்று மரத்து கடினப் படும் பாதிப்பையுண்டாக்குகிறது.

Ⓡ இந்த ஆன்மீக அசட்டைத்தனம் நம்மில் படர்ந்து கொண்டு இருத்தல், நாம் புலனால், அறியக்கூடாத முறையில், நமது ஆன்மீக உணர்வறிவை மரத்துப் போகச் செய்கிறது.

Ⓡ அவ்விதம் அது சத்தியம் நம்மில் அகத்தூண்டுதலை உண்டாக்கக் கூடாதவாறு ஆன்மீக உணர்வை கடினப்பட செய்கிறது.

Ⓡ அவ்விதம் ஆன்மீக அசட்டைத்தனம், நம்மில் படர்வதை உணர்ந்தறிவோமானால், ஜெபத்துக்கும், தேவனோடு ஆன்மீக ஒருமைப்பாட்டுக்கும் நம்மை ஒருமுகப்படச் செய்வது முதல் கடமையாகும்.

Ⓡ மேலும், தேவனுடைய வார்த்தையின் பரிசுத்தமாக்கும் வல்லமை செயலுருவில் உணரப்படும்படி, தேவ வார்த்தைகளோடு ஆன்மீக ஒருமைப்பாட்டுக்கும் நம்மை ஒருமுகப்படுத்துவது நமது முதல் கடமையாகும்.

Ⓙ ஆகவே சுவிசேஷ சபை, சுவிசேஷயுகம் முழுவதும் (இன்று என்னப்படுமளவும்) குற்றமில்லாது பேணிக்காக்கப்படும்படி ஒவ்வொரு நாளும் தேவைக்கேற்றபடி ஒருவரையொருவர் அறிவுரையால் பரிந்து ஊக்குவிக்க தனிப்பட்ட அங்கத்தினனுக்கு உரிமையிருக்கிறது.

Ⓙ கிறிஸ்துவின் நாள் மிகவும் துரிதமாக நெருங்கிக் கொண்டிருக்கிறதால், இந்தக் கடமையும், இந்த உரிமையும் எவ்வளவு அதிகமாய் நம்மேல் விழுந்த பொறுப்பாய் இருக்கிறது!

Ⓡ ஏனெனில், நாம், ஆரம்பத்தில் கொண்ட நமது தைரிய மனஉரத்தை உறுதியாய் முடிவுமட்டும் பிடித்துக் கொண்டிருப்போமானால், நாம் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பங்குகொள்ளுகிறவர்களாக ஆக்கப்படுவோம்.

ஒத்த வேதபகுதிகள் :

அப். 13:15 ; 20:2 ; ரோம.12:8 ; 2 கொரி. 9:5 ; 1 தீமோ 6:2 ; தீத். 2:15 ; எபி.13:22 ; உபா. 29:18 ; சங். 9:15,16 ; நீதி.5:22 ; ஏசா. 57:20,21 ; மாற். 7:21—23 ; கலா.6:7,8 ; 1 பேது. 4:3

HEAVENLY MANNA - MARCH 10